செ.வெ.எண்.280/2009/செமதொஅ நாள்: 05.09.2009

**போலி குடும்ப அட்டைகளை நீக்குவதற்கான ஆய்வினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. மற்றும் உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு செயலர் திரு.கே.சண்முகம்,இ.ஆ.ப. ஆகியோர் வீடியோ கான்பரன்சிங் முறை மூலம் மேற்கொண்டார்கள்.**

புழக்கத்திலுள்ள குடும்ப அட்டைகளில் போலி குடும்ப அட்டைகளை கண்டறிந்து நீக்கம் செய்வதற்கும், புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகள் தொடர்பான புள்ளி விவரங்களை 100 சதவீதம் வீடு, வீடாக சென்று மறு ஆய்வு செய்து உரிய திருத்தங்கள் செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதன் அடிப்படையில் அனைத்து பகுதிகளுக்கும் தலத் தணிக்கை அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு, குடும்ப அட்டைகளை வீடு, வீடாக சென்று சரிபார்த்து வருகின்றனர்.

இன்று (05.09.2009) உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு செயலர் திரு. கே.சண்முகம்,இ.ஆ.ப., நுகர்பொருள் வழங்கல் ஆணையர் திரு.க.இராஜாராமன்,இ.ஆ.ப. ஆகியோர் காஞ்சிபுரம், திருவள்ளுர், மதுரை, சிவகங்கை மற்றும் நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் வீடியோ கான்பரன்சிங் முறையின் மூலம் குடும்ப அட்டைகளை சரிபார்க்கும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா,இ.ஆ.ப. அவர்கள் பங்கேற்று வீடியோ கான்பரன்சிங் மூலம் மாவட்டத்தில் நடைபெற்று வரும் பணிகள் குறித்து விளக்கி கூறினார்.

உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு செயலர் திரு. கே.சண்முகம்,இ.ஆ.ப. அவர்கள் பேசுகையில், "தலத் தணிக்கை அலுவலர்கள் வீடுவீடாக குடும்ப அட்டைகளை சரிபார்க்க வரும்போது அவர்கள் விரைவாகவும், சரியாகவும் பணி முடிக்க ஏதுவாக குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, மின் இணைப்பு அட்டை, சமையல் எரிவாயு இணைப்பு புத்தகம் ஆகியவற்றை தயாராக வைத்திருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. தலத் தணிக்கை அலுவலர்கள் தங்களது பகுதிகளில் குடும்ப அட்டைகளை சரிபார்க்க வரவில்லை என்றாலோ அல்லது அவர்கள் வீடுவீடாக சரிபார்க்கும் பணியில் ஈடுபடாமல் ஒரே இடத்தில் அமர்ந்து கொண்டு குடும்ப அட்டைகளை சரிபார்க்கும் பணிகளில் ஈடுபட்டாலோ அல்லது ஒரு வாரத்திற்கு மேலாக தணிக்கை பணிக்கு வராத தலத் தணிக்கை அலுவலர்கள் குறித்தும் உடனடியாக மாவட்ட வழங்கல் அலுவலர், வட்ட வழங்கல் அலுவலர்களுக்கு பொதுமக்கள் தொலைபேசி மூலம் புகார் தெரிவிக்கலாம். இந்த பணியானது புழக்கத்திலுள்ள குடும்ப அட்டைகளை சரிபார்க்கும் பணியாகும். புதிய குடும்ப அட்டைகளுக்கான பணி அல்ல என்றும், இதற்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும்." என்று கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.பழனி மற்றும் 8 வட்ட வழங்கல் அலுவலாகள் உடனிருந்தனர்.

வெளியிடுபவர்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.